ரக்தாக்ஷி ௵ மாசி ௴ March 192

ஓம்

# சன்மார்க்க பானு

தொகுதி 1 பகுதி 2



VOL I.] SANMARGA BHANU [NO. 2.

பொருளடக்கம். பக்கம்.


1. கடவுள் வணக்கம் ... ... 33
2. நமது நாடு ... ... ... ... 34
3. தியானம் ... ... ... ... 37
4. ஜெ. ஸி. போஸின் ஆராய்ச்சி ... 40
5. கல்விக்குறிப்புகள் ... ... ... 43
6. புருஷார்த்தம் ... ... ... 46
7. மூகம்மதிய அரசனும் இந்து மந்திரியும் 49
8. வேதாந்த சாஸ்திரார்த்த சங்கிரக வினாவிடை ... ... ... 52
9. சிறுவர் பக்கம் ... ... ... 57
10. கூட்டுறவினால் உண்டாகும் நன்மைகள் 59
11. பத்திராதிபர் விண்ணப்பம் ... ... 63
12. காலண்டர் ... ... ... ... 64


**Editor: Pandit P. Sriniv[illegible] Naidu.**

Printed by M. Ramanujachariar, at the V[illegible]ee Press, Chittoor, and published at Ranipet [illegible]sulu Naidu.

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | 1—0—0 |
| | பினாங்கு, சிங்கபூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ரூபா. | 15-0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20-0—0 |

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு ரூபா. | 10-0—0 |
| அரைப் பக்கத்திற்கு | " " " | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | " " " | 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத் தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்படவேண்டும்.

பத்திராதிபர்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

உ

ஓம்.

பரப்ரஹ்மணே நம:

# சன்மார்க்கபானு

“எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு”—(குறள்)

(ALL RIGHTS RESERVED).

கற்றை 1 } இராக்தாக்ஷி ௵ மாசி ௴. { கதிர் 2

## கடவுள் வணக்கம்

பாகத்தி னற்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லைவேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையுமில்லை
யோகத்தி லேசிறிது முயலவென்றாற்றேக
மொவ்வாதிவ் வூண்வெறுத்தால்
உயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக
ளுபாயத்தி னற்செய்யவோ
மோகத்தி லேசிறிது மொழியவிலை மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்கவென்றால்
முற்றாது பரிபாக சத்திகளனேகநின்
மூதறிவி லேயெழுந்த
தாகத்தி லேவாய்க்கு மமிர்தப்ர வாகமே
தன்னந் தனிப்பெருமையே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (1)

சிற்ற ரும்பன சிற்றறி வாளனே தெளிந்தால்
மற்ற ரும்பென மலரெனப் பேரறி வாகிக்
கற்ற ரும்பிய கேள்வியான் மதித்திடக் கதிச்சேர்
முற்ற ரும்பிய மௌனியா[illegible]பாத்திடை முளைப்பான் (2)

சன்மார்க்கபானு.

இரக்தாட்சி ஹூ மாசிமீ.

# நமது நாடு.

---

நமது நாடு; நமது புண்ணிய நாடு; புலவர்கள் புகழ்ந்து போற்றிய நாடு; பலவளங்களும் பல்கிப் பெருகிய பாரத நாடு; நாட்டிற்குரிய நலங்க ளனைத்தும் நண்ணிய நாடு; எவ்வகைச் சீதோஷ்ணங்களை எய்த விரும்பினும் அவ்வகைச் சுகத்தை யளிக்கும் நாடு; இதற்கொப்பிலை யென இருத்திய தூண்போல் இமயமலை நின்றியங்கும் நாடு; கங்கை, யமுனை, காவிரி முதலிய புண்ணிய நதிகளைப் பொருந்திய நாடு; தேவாலயங்கள் திகழும் நாடு; நாகரீகத்தைப் பிறநாட்டார்க்கு நலக்கக் கொடுத்த புராதன நாடு; சிவகாருணியம் தெய்வபக்திகளில் ஒப்புயர்வில்லா உன்னத நாடு; இம்மையை வெறுத்து மறுமையை விரும்பும் எழில்சேர் மகான்களிருக்கும் நாடு; ஒரு புறவினுக்கா உயர்துலையேறிய உத்தம சிபியும், தந்தைசொல் மறாமல் தண்டகவனத்தைத் தம்பியோடடைந்த தசரதராமனும், பசுவின் கன்றைக் கொன்ற பழிக்காகத் தன் மகன்மேல் தேரோட்டிய மனுச்சோழனும் முதலாம் எண்ணில் இறைவர்கள் செங்கோல் செலுத்திய தெய்விக நாடு; சீதை, சாவித்திரி, திரௌபதி முதலாம் கற்புக்கரசிகள் கதித்த நன்னாடு; வள்ளுவர் ஔவை கம்பர் இளங்கோ முதலாம் எண்ணில் புலவர் பல்லோர் கவி மாரிபெய்த கவின் பெறு நாடு; சம்பந்தர் முதலிய சிவனடியார்களும், பன்னிரண்டாழ்வார்களெனும் பெரும்பக்தரும், சங்கராதிய மதத்தலைவர்களும் அற்புதச் செயல்கள்செய்தருளிய நாடு; இத்தகைத்தென்று இயம்பிடவொண்ணு சுந்தரம் மிகுந்தது நம் இந்திய நாடு.

இவ்வாறு மிகவும் சிறந்த நிலையிலிருந்த நம்நாடு இப்பொழுது எவ்வித நிலையிலுள்ளதென்பதை ஆராயப்புகுந்தால் 'இதுவுமோர் நாடோ!' என்று சந்தேகிக்கும்படி யிருக்கிறது.

நாடென்ப நாடாவளத்த; நாடல்ல
நாட வளந்தரும் நாடு (குறள்).

'எப்பொருளுக்கும் பிறநாட்டை எதிர்பாராம லிருப்பதே நாடு' என்பது நாட்டின் இலக்கணம். ஆனால் நம நாட்டில் இப்பொழுது 'நாடு' என்னும் பதம் 'பிறர் உதவியை நாடு' என்று பொருள்படும் நிலைமையிலுள்ளது. இதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ஒரு நாட்டிற்கு ஜீவனாதாரமா யிருப்பவை (1) விவசாயம் (2) கைத்தொழில் (3) வியாபாரம் என்னு மிம்மூன்றுமேயாம். இவற்றுள்,

(1) விவசாயம்:—இதுவே உயிர்போன்றது. இது நம் நாட்டில் தற்பொழுது பாழ்பட்டுக்கிடப்பது பிரத்தியக்ஷம். காலமழையில்லாமையால் காய்ந்துகிடப்பது ஒருபுறம்; அதிக மழையால் நாசமாவது மற்றொருபுறம். மாதம் மும்மாரி யென்பது ஏட்டளவிலே; அனுபவத்தில் வருஷம் மூன்று மழையும் காணோம். 'மாரி யல்லது காரியமில்லை' யாகையால் விளைவு குன்றிவிட்டது. பயிரையே நம்பியிருக்கும் ஏழைக்குடிகள் குடிக்கக் கூழற்று 'சிலோன் போகலாமா? நெட்டாளம் போகலாமா?' என்று தவிக்கின்றனர். ஏன்? போய்க்கொண்டு மிருக்கின்றனர். ஒருரூபாய்க்கு பழையபடியில் சில வருஷங்களுக்குமுன் பன்னிரண்டு படியாக விற்ற அரிசி இப்பொழுது புதியபடியில் மூன்று படிக்கும் பஞ்சமாய் விட்டது. ஒன்றுக்கு நாலாகவும் ஐந்தாகவும் விலை வாசிகள் ஏறிவிட்டன. ஏழைக் குடியானவர்களும் சொற்பசம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தரும் படும்பாடு கொஞ்சமல்ல.

(2) கைத்தொழில்:—சிறிய ஊசியையும் தானே செய்து கொள்ள முடியாமல் பிறரை நாடும் நிலைமையி லிருக்கின்றது. இதைக்கொண்டே நம் நாடு தொழிலில் எவ்வாறிருக்கின்றதென்பது விளங்கும்.

(3) வர்த்தகம்:—கைத்தொழிலில்லாத விடத்தில் வியாபார மேன்மையும் கிடையாது. உள்ள வியாபாரிகளுக்கோ வியாபார தோரணையே தெரிவதில்லை. ஒருவர் ஒருவியாபாரம் செய்தால் மற்றோரும் அதையே செய்ய விரும்புவார்களே யன்றி, வேறொன் றைச் செய்ய முற்படுவதில்லை. வியாபாரஸ்தல மில்லாமலே ஒரு கம்பெனி யென்று பேர்வைத்துக்கொண்டு விளம்பரப் புத்தகங்கள் (catalogues) வெளியிடுவதும் வேறிடங்களில் வாங்கி அனுப்புவது மாக இருக்கின்றனர் சில வியாபாரிகள். இன்னும் எவ்வளவோ சூழல்களும் மோசங்களும் நிறைந்து கிடக்கின்றன. 'இங்கிலீஷ் கம்பெனியில் வாங்கினால் சாமான் நல்லதாகவும் விலையும் சரியாக வும் இருக்கும்' என்று ஜனங்கள் நம்புவதே இதற்குப் போது மான சாக்ஷி யாகிறது.

கல்வியைப்பற்றி ஆராய்ந்தால் சராசரி நூற்றுக்குத் தொண் ணூற்றைந்துபேர் கல்வி யில்லாதவர்களா யிருக்கிறார்களென்று தெரிகிறது. இஃதிங்ஙனமாக,

தீண்டாதவர்—தீண்டப்படாதவர், பிராமணர்—பிராமணரல்லா தார், இந்து—முஸ்லீம், வடகலை—தென்கலை முதலிய ஜாதிச்சண்டை மதச்சண்டைகள் மூலைக்கு மூலைதோன்றி அலைக்கழிக்கின்றன.

நகரவாசிகளிற்பலர் எப்படி எப்படியோ பணம் சம்பாதித்து விட்டு 'பயாஸ்கோப்' முதலிய நாடகசாலைகளுக்கும், 'காபிஹோடல்' களுக்கும் 'விளக்கின்மேல் விழும் விட்டிற் பூச்சிகளைப்போல்' சென்று பணத்தைப் பாழாக்குகின்றனர். பணக்காரர்களோவென் றால், சிலர் எச்சிற்கையால் ஈயும் ஒட்டாதவர்களாயும், சிலர் வீண் டம்பரங்களுக்கு ஆயிரக்கணக்காய்ச் செலவழிக்கின்றவர்களாயு மிருக்கின்றனர். தேசப்பற்று, மதப்பற்று, தாய்ப்பாஷைப்பற்று நாளுக்கு நாள் குறைந்து கொண்டிருக்கின்றன. இவைகளுக் காகப் பாடுபட முன்வருவோர் பைத்தியக்காரர்களாக்கப் படுகின்ற னர். அந்தோ! இந்தியநாடே! உன் சிறப்பு இப்படியா குன்ற வேண்டும்! இங்கிலையில் நாட்டின் சிறப்பைக் கூறுவது 'நான் லக்ஷாதி பதியின் மகன் எனக்கொரு பைசா பிச்சைகொடு' என்று கேட்பது

போல் நகைப்பிற்கே யிடமாகும். (இவைகளைப் பின்பு தனித்தனியாக எடுத்து ஆராய்வோம்). நம்நாட்டிற் கேற்பட்டுள்ள இக் கொடிய சாபத்தை நீங்கிக் காப்பாற்றுமாறு சர்வ வல்லமையுமுள்ள ஆண்டவரைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

---

ஸ்ரீ

## தியானம்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் பொருளையாவது ஒருவன் பெயரையாவது மறந்துவிட்டு அதனை ஞாபகத்திற்குக் கொண்டுவர ஒருவன் யோசிக்கின்றான். மூக்கையும் நெற்றியையும் தடவுகின்றான். அப்போது அவை அவனுடைய ஞாபகத்திற்கு வருகின்றன. அந்நேரம் அவனுடைய சித்தம் அவ்விஷயத்தில் ஏகாக்ரதையை யடையக் காண்கிறோம். புகழ்புனைய விருப்பமுடையான் ஒருவன் அதற்காகப் பாடுபலபட்டு அதனிடத்தே மனத்தைச் செலுத்துகின்றதைப் பார்க்கின்றோம். கல்வி கற்கக் காதலுடையவன் கண்ணுங்கருத்துமாக இருந்து அதனிடத்தே மனம் பொருத்துவதையும் பார்க்கின்றோம். தனத்தைத் திரட்ட ஆசைப்பட்டானாயின் அதைத்தேடும் விஷயத்தே பலவழியானுஞ்சென்று மனத்தை அதனிடத்தே ஒருப்படுத்துகின்றதையும் தெரிகின்றோம். ஆதலால் நாம் ஈடேறவேண்டுமாயின், பேதமையால் மறந்த பரம்பொருளை நமக்குள் உணர நாம் அதனிடத்தே கருத்தை ஊன்றி நிற்றல் அவசியமேயாம். அங்ஙனம் மனத்தை அப்பரவஸ்துவினிடத்துப் பதியவைப்பதே தியானமாம்.

சித்த சஞ்சலம் தியானத்திற்குப் பெரிய பிரதி பந்தகமாம். சித்த சலனத்தை நீக்குதற்குப் பதஞ்சலி பகவான் யோகசூத்திரத்தில் எண்வகை உபாயங்களை அருளியிருக்கின்றார். அவற்றைப் பிரசங்கானுசாரமாக இங்குச் சொல்லுவாம். (1) "தத் பிர[illegible]ஷேதார்த்தம் ஏகதத்வாப்யாஸ"

சித்தக் கலக்கத்தை நீக்கும் பொருட்டுத் தனக்குப் பிரியமான ஏதேனுமொரு தத்துவத்தில் அப்யசித்தல் வேண்டும். அதாவது மனத்தை அதனிடத்து நிலையாக நிற்கச்செய்யவேண்டும். கிரமந்தப்பாமல் ஒரே விஷயத்தில் மனத்தை நிறுத்துவதால் ஏகாக்ரசித்த முண்டாகும். சித்தம் ஒருமுகப்படவே சித்தசலனம் நீங்கும். சித்தசலன மின்றி யிருப்பதற்குப் புறக்கர்மத்தில் பிரவர்த்திக்கும் மற்றோருபாயம் கூறல். (2) "மைத்திரீ கருணா முதிதோபேக்ஷாணாம் சுகதுக்க புண்யாபுண்ய விஷயாணாம் பாவனாதச் சித்தப் பிரசாதனம்" இன்புற்றிருப்பவர்களிடம் பொறாமை கொள்ளாமல் அவர்களோடு நட்பு பாராட்டியும், துன்புற்றவர்களின்மீது மனக்கடினமில்லாமலும் அலட்சியஞ் செய்யாமலும் அத்துக்கந்தவிர்க்க இரக்கங்கொண்டும், புண்ணியர்களைப்பார்த்து த்வேஷிக்காமல் அப்புண்ணியத்திற்குச் சந்தோஷித்தும் பாவிகளிடத்தில் விருப்பு வெறுப்பின்றி உதாசீனமாயிருத்தலுமாகிய புறத்தொழில் பழகலால் மனப் பிரசந்நதை (களிப்பு) உண்டாகும். உண்டாகவே மனச்சலனம் மாறும். விருப்பு வெறுப்பு முதலானவை சித்தசலனத்தைப் பெருகச்செய்யும். நட்பு இரக்கம் முதலியவைகளால் காமம் சினம் என்பவை வேரோடு நாசமாம். ஆகவே, மனம் மலரும்; மலரவே ஏகாக்ரசித்த முண்டாகும். (3) "பிரச்சாதன விதாரணாப்யாம்வா பிராணஸ்ய." பிராணவாயுவை வெளியில் விடலாலும் உள்ளே நிறுத்துவதாலும் சித்தைகாக்ரயம் உண்டாகும். எல்லா இந்திரிய விருத்திகளும் பிராணவாயுவை ஆதரவாய்க்கொண்டிருக்கின்றன. மனதும் பிராணனும் தத்தம் வியாபாரங்களில் சம்பந்தப்பட்டே யிருக்கின்றன. சுவாசகதி தடைப்பட்டு பிராணஜய முண்டானால் இந்திரியவிருத்திகளும் மனோவிருத்திகளும் அசைவின்றி நிற்கும். அதனால் சித்தவமைதிசேரும். பிராணாயாமம் தக்க குருவின்பால் அப்யசிக்க வேண்டும். அவர் உதவியில்லாமல் சுவயமாக முயற்சித்தல் கேட்டை விளைக்கும். அது வெடிமருந்துடன் பழகுவதொக்கும். (4) "விஷயவதிவா பிரவிருத்திருத்பன்னாஸ்திதி நிபந்திநீ" சப்தாதி விஷயங்களாலுண்டாகும் பிரவிருத்தியும் சித்தஸ்தைர்யத்தை உண்டாக்கும். நாசி நுனியில் சித்தத்தை நிறுத்தலால் நறுமணஞான முண்டாகும்; நாவின் நுனியில் சித்தத்தை நிறுத்தலால் நற்சுவையறியும்; தாலுமூலத்தில் திவ்ய ரூப ஞானமும், நாவின் நடுவில் திவ்ய ஸ்பர்சஞானமும், நாவினடியில் திவ்ய சப்த ஞானமுமுண்டாகும். ஞானேந்திரிய வாயிலாகத்தத்தம் திவ்ய விஷயங்களிலுண்டாகிற ஞானம் சித்த ஏகாக்ரதையை உண்டாக்குகிறதற்குக் காரணமாகும். இவ்வுபாயங்களை யோகசிட்சையை யடைந்த யோகியர் மாத்திரமே அறிவார்கள். (5) "விசோகவா ஜோதிஷ்மதீ" ரஜோதமோ குணங்களால் வரும் சோகமாகிய துக்கமில்லாத சாத்விஸ் பிரகாச திருஷ்டியால் சகலவி[illegible]த்திகளும் லயமாகிச் சித்தம் ஸ்திரப்படும்.

அதாவது இருதயகமலமத்தியில் அலையற்ற கடல்போல் சித்தத்தினுடைய சற்பாவனையால் உண்டாகும் பிரகாசத்தால் (சாத்விகப் பிரகாச அவலோகனத்தால்) விருத்திகள்யாவும் நசித்து நிச்சல சித்தம் நேரும். (6) "வீதராக விஷயம்வா சித்தம்." விஷயங்களில் விருப்பம் வையாமலும் அவைகளின் வாஸனையை நினைப்பிற்குக் கொண்டுவராமலுமிருந்தால் சித்த ஏகாக்ரமுண்டாகும். அதாவது விஷயசிந்தனையை யொழித்து நிர்விஷயமாக நிற்கின் சித்தம் ஒருமுகத்தை யெய்தும். அல்லது விஷயவாதனையை விட்ட சாதுபுங்கவர்களின் சித்தத்தைப் பாவிப்பதாலும் சித்தவமைதி சேரும். (7) "ஸ்வப்னநித்ராஞானலம்பனம்வா." ஜாக்ரத்தில் சொப்பனத்தின் ஞானத்தையாவது சுழுத்தியின் ஞானத்தையாவது பாவனை செய்யும் சித்தம் நிலைப்படும். அதாவது மனோராஜ்ய சம்சாரம் ஆத்மாவினிடத்தில் தீர்க்க சொப்பனம் போன்றது. பிரம்மா முதல் ஸ்தாவரம் வரையுமுள்ள சர்வமும் சுழுப்திபோல் ஆத்மாவில் லயப்படும் என்பதாகப் பாவித்தலாம். அல்லது மனமகிழ்வைத்தரும் மகாத்மதரிசனம் முதலாய கனுக்கண்டு விழித்தபிறகு அதைநினைத்தலாலும் அருந்துயிலவத்தையில் 'ஒன்றுமறியாது சுகமா யுறங்கினேன்' என்று அதை அடிக்கடி நினைப்பதாலும் மனவமைதி மருவும். (8) "யதாபிபதத்தியாஞத்வா" ஹரிஹராதிய தேவதைகளுள் தனக்கிஷ்டமான தெய்வத்தைத் தியேயமாக்கித் தியானிப்பதாலும் சித்தஞ்சலியாமல் திடத்தை யடையும். மனவொருமைக்காக மேற்சொல்லிய பலவகைச் சாதனங்களில் இறுதிச்சாதனம் தியானமாம்.

பிரியவஸ்துவைக் குறித்துத் தியானம்பண்ணுவதால் ஆனந்தமுண்டாகும். அவ்வானந்தத்தை மனம் விடமாட்டாது. அதனுல் சித்தம் நிலைப்படும். இந்திரிய சுகத்தை யுண்டாக்கும் வியக்தி (புருஷன் அல்லது ஸ்திரீ) யையாலுைம், வஸ்துவையாலுைம் தியானித்தலால் சித்த சஞ்சலமுண்டாகும். நிர்மலப்பிரியத்திற்கு ஊர்ஜிதமாக விருக்கும் வஸ்துவின் இடைவிடாச் சிந்தனத்தால் ஏகாக்ரசித்தம் ஏற்படும். இவ்விஷயத்தில் ஓர்கதையுண்டு.

இல்லறத்தான் ஒருவன் துறவுபூண்டு குருவையடுத்து அவருக்குப் பணிவிடைகளைச் செய்துவந்தான். அதனுல் சித்தம் மகிழ்ந்து அவனுக்குச் சிரவணம் பண்ணிவைக்க விரும்பினுர். அக்குரு அவனுடைய மனம் அங்குமிங்கும் அலைவதைப்பார்த்து சித்தம் சிரவணத்திற் பதியாதிருப்பதற்குக்காரணம் என்னவென்று கேட்டார். அதற்கு அச்சிஷ்யன் சுவாமி! பூர்வாசிரமத்தில் எனக்கு அத்யந்தம் பிரியமான ஓர் எருமை இருந்தது. அது என் நினைவுக்கு வருவதால் என்சித்தம் சலிக்கின்றது'

என்றான். குரு 'அப்படியானல் சிரவணத்தைவிட்டுச் சிறிதுகாலம் உனக்குப்பிரியமான எருமையைச் சிந்தித்துக்கொண்டிரு' என்று கட்டளையிட்டார். அப்படியே அச்சிஷ்யன் தனியாகவமர்ந்து எருமையை க்குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தான். சிலநாள் சென்றபிறகு குரு அச்சிஷ்யனிருக்கும் வீட்டின் ஓர் சிறிய அறையிலிருந்துகொண்டு 'நீ இவ்வழியாக வா சிரவணஞ்செய்விக்கிறோம்' என்று கூப்பிட அவன் உடனே வந்தான். அதனல் இவனுக்கு இன்னம் திடசித்தம் உண்டாக வில்லையென்று தெரிந்து குரு மருபடியும் அவனை மஹிஷ (எருமை)த் தியானஞ் செய்யும்படி ஆஞ்ஞாபித்தார். சிஷ்யன் மீண்டும் மஹிஷத் தியானத்திருந்தான். சிலதினங்கள் போனபிறகு குரு முன்போல் அவ் வறையிலிருந்துகொண்டு சிஷ்யனை வரக்கூப்பிட்டார். அப்போது சிஷ்யன் 'குரு சுவாமியே! நான் உம்மிடம் எவ்விதம் வருவேன். எருமை யின் கொம்பினல் தடுக்கப்படுகின்றேனே' என்று பதில் சொன்னன். அதற்கு அவர் சந்தோஷித்து எருமையின்மீது சிஷ்யனுக்குத் தியானஞ் சித்தித்தது. அவனுக்கு அதனிடத்து திடச்சித்தம் ஏற்பட்டுவிட்டது உணர்ந்து சிஷ்யனைநோக்கி குருவானவர் 'இப்படிவா, கொம்புகள் உன்னைக் குறுக்கிடாவண்ணம் தக்க உபாயஞ் செய்வோம்' என்று, கொம்பு கால் வால் முதலியவைகள் ஒவ்வொன்றையும் நீக்கிப்பிறகு அவனைப் பரம்பொருளின் தியானத்தில் நிறுத்தினர். பிறகு, அவன் உண்மைதெளிந்து உயர்வை யடைந்தான். (தொடரும்)

க. அரங்கநாதப் பிள்ளை,

வேதாந்த தர்க்க போதகாசிரியர் சென்னை.

---

## ஸர் ஜெகதீச சந்திர போஸின் ஆராய்ச்சிகள்.

("சர்வம் ஈஸ்வர மயம்.")

சகல அண்ட பிண்ட சராசரங்களையும் படைத்துக் காத்து அழித்து வரும் சர்வேசுவரன் 'அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய்' எவ் விடத்தும் எல்லாப்பொருள்களிலும் நின்று இயங்கச்செய்யும் ஜோதியாய், 'அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்யம் நாராயண ஸ்திதஹ' என்றபடி, எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் இடைவிடாது வியாபித் திருக்கின்றுராதலின், 'எல்லாப்பொருள்களும் தத்துவத்தில் ஒரேதன்மை

யன' என்பது சர்வ மத சித்தாந்தமாம். இது நமது முன்னோர்களால் அனுபவ மூலமாகத் தெரிந்துகொள்ளப்பட்டது. வேதங்களால் போதிக்கப்படும் பரம சுகிருதமான தத்துவமும் இதுவே. நமது வேதத்தினிடத்தும் பெரியோர்களின் வார்த்தையினிடத்தும் நம்பிக்கை யில்லாத பிறரும், மேல்நாட்டு நாகரீகத்தில் அகப்பட்டுழலும் நம்மவரிற் பலரும் இவ்வுண்மையை யறியாமல் மயங்கித் திரிவர். அன்றி, 'இது சுத்தப்பொய்' என்றும் வாய்கூசாது கூறுநிற்பர். இவர்கள் தம் சிற்றறிவிற் கெட்டாமையின் இங்ஙனம் சொல்லுகின்றனர் போலும்.

நம் தேசம் செய்த ஓர் பெரும் பாக்கியத்தின் பயனாக தற்போது வங்காளத்தில் ஒருமகான் அவதரித்திருக்கின்றனர். அவரது திருப்பெயர் 'ஸர் ஜெகதீச சந்திர போஸ்' என்பது. இவர் பிரகிருதி சாஸ்திரத்திலும் (Physics), ஜீவ வர்க்க நிர்ணய சாஸ்திரத்திலும் (Biology) மகா நிபுணர். இவரது புத்தி நுட்பத்தையும் சாஸ்திர ஆராய்ச்சித் திறமையையும் அவ்வாராய்ச்சிக்காக அவரால் கண்டுபிடிக்கப்பட்ட நூதன கருவிகளின் மேன்மையையும் கண்டு வியந்து அவரைக் கொண்டாடிப்புகழாத மேல்நாட்டுச் சாஸ்திர நிபுணர்கள் ஒருவருமிலர். இம்மகான் நமது வேத உண்மைகளை, யானையைக் கொண்டு யானையைப் பிடிப்பது போலவும், வைரத்தைக் கொண்டே வைரத்தை வெட்டுவது போலவும் மேல்நாட்டு சாஸ்திரங்களைக் கொண்டே கரதலா மலகம்போல் பிரத்தியக்ஷமாக நிரூபித்துக் காட்டி வருகின்றனர். இவர் தன் ஆராய்ச்சியால் கண்டறிந்தவற்றைச் சுருங்கச் சொல்லுமிடத்து,

"ஜடம் அசேதனம் எனக்கருதப்படும் புல் பூண்டு செடி கொடி முதலிய தாவரங்களும், செம்பு, பித்தளை, பொன் முதலிய ஜங்கமங்களும் சேதனமாகக் கருதப்படும் மனிதனைப் போல உயிருள்ளவைகளே; மனிதனைப்போலவே அவைகளுக்கும் உணர்ச்சி, வளர்ச்சி, சுகம், துக்கம், இன்பம், துன்பம், இருப்பு, இறப்பு என்பவைகளுண்டு. மனிதனுடைய சரீரமானது எந்தக் காரணங்களினால் எவ்வெவ்வுணர்ச்சியையும் அனுபவத்தையும் பெறுகின்றதோ அதைப்போலவே அதேகாரணங்களால் செடி கொடிகளும் உலோகங்களும் அதே உணர்ச்சியையும் அனுபவத்தையும் அடைகின்றன. ஆகையால் அவைகளும் நம்மைப்போலவே சரீரத்தை உடையன. ஒரேதன்மையுடையன. பார்வைக்கு வெவ்வேறாகத் தோன்றினும் எல்லாவற்றுள்ளும் ஒரே தன்மையானது வியாபித்திருக்கிறது. ஆகையால் உலகம் முழுவதையும் ஒரே வஸ்துவாகப் பார்க்கவேண்டும். எந்தப் பொருளையும் தன்னைப் போலவும், தானாகவும் பாவித்தறிவதே ஞானம்" என்ற அத்துவித சித்தாந்தத்தின் பரம சூட்சுமமான ரஹஸ்யமே."

சாஸ்திர ஆராய்ச்சியில் பால்யமுதலே அதிக ஊக்கமும் தேர்ச்சியும் உடையவரும், அதற்கென்றே தன் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்திருக்கிறவருமான ஜெ. ஸி. போஸ் என்னும் இம்மகிபர் இவ்வாராய்ச்சிகளைத் தொடங்கும்போது கல்கத்தா ராஜதானிக் கல்லூரியில் சொல்ப சம்பளத்தில் ஓர் உபாத்தியாயராக இருந்தார். அப்பொழுது பாடசாலைச் சம்பந்தமான காரியங்களைக் கவனிக்கும் நேரம்போக மிகுதி யிருக்கும் சொல்ப இரண்டொருமணி நேரத்தை மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்து அதைப் பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சியில் அவர் செலவழிப்பது வழக்கம். "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்பதுபோல வருடந்தோறும் போதித்த பாடங்களையே திரும்பத் திரும்பக் கற்பிக்கும் அவருடைய உபாத்திமைத் தொழிலுக்கும் அவருடைய அபார புத்திக்கும் வெகு தூரமாக இருந்தது. நாள் செல்லச் செல்ல அவருக்கு ஆராய்ச்சியிலுள்ள ஊக்கமானது மேன்மேலும் அதிகரித்து ஒருவன் தன்னுடைய மதத்தில் எவ்வளவு ஊக்கமும் அன்பும் ஆசையும் வைத்திருப்பானே அதைப்போல் பதின்மடங்காகிவிட்டது. தான் சாஸ்திர ஆராய்ச்சிக்கென்றே தன் உயிரை அர்ப்பணம் செய்துவிடவேண்டும் என்று அவர் தீர்மானம் செய்துகொண்டார். தன்னுடைய 35-வது பிறந்த நாளன்று "இனி நான் சுயநலத்தைக் கருதாது இவ்வாராய்ச்சியிலேயே என் காலம் முழுமையும் செலவு செய்வேன்" என்று பிரதிக்ஞை செய்துகொண்டார். இங்கிலாந்தில் கேம்ப்ரிட்ஜி என்னும் உயர்தரக் கல்லூரியில் முதல்தரக் கல்வியைப் பெற்றவரானபடியாலும், மிகவும் புத்திகூர்மையுள்ளவரானபடியாலும், சோதனை செய்வதில் கைதேர்ந்தவரானபடியாலும், இவருக்கு அவ்வேலை ஓர் கஷ்டமாகத் தோன்றவில்லை. சாஸ்திர ஞானத்திலும், மேல்நாட்டு ஆராய்ச்சி நிபுணர்களுக்கு அவர் கொஞ்சமும் சளைத்தவரல்லர்.

"தாங்களே நவீன ஆராய்ச்சிகளில் கைதேர்ந்தவர்கள், தங்களுக்கு நிகர் ஒருவரும் கீழ்நாட்டில் இருக்கமுடியாது" எனத் தற்பெருமை பாராட்டிக் கொள்ளும் மேனாட்டார்களுக்கு ஸர் போஸின் பெயரைக் கேட்கும்போது ஆச்சர்யமாக இருக்கலாம். "முன்னோர்களுடைய சாஸ்திரங்களை வேதவாக்காகக் கொண்டு, மூட நம்பிக்கையுடன் 'வெள்ளைக் காக்கை மல்லாக்கப் பறந்தது' என்றாலும் நம்புகிற இந்துக்களில் ஒருவன் மேல் நாட்டு சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களைவிட அதிக ஆராய்ச்சிகளைச் செய்கிறதென்பது எப்படிமுடியும்?" என்பது அவர்கள் கேள்வி. ஆனால் அதி நுட்பமான ரகஸ்யங்களையும் கண்டறிவதில் ஹிந்துதேசத்தவர் கூர்மையான புத்தியுடையவர்கள் என்பதையும், மேல்நாட்டு சாஸ்திரங்களெல்லாம் இப்போது இருநூறு வருஷங்களுக்குள்ளாகவே ஏற்

பட்டன வென்பதையும் மேல்நாட்டார் நாகரீகமற்றவர்களாய் காட்டுப் பிரதேசங்களில் திரிந்துகொண்டிருந்த அக்காலத்திலேயே (அதாவது அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே) நம் இந்துதேசமானது நாகரீகமடைந்து அநேக சாஸ்திரங்களில் முன்னேற்றமடைந்திருந்தது என்பதையும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள் போலும். அவ்விதம் இந்துக்களுக்கு நவீன சாஸ்திரங்களில் திறமை ஏற்படுவது துர்லபம் என்று நினைக்கும் மேல்நாட்டார் ஸர் ஜெ. ஸி. போஸுடன் ஐந்து நிமிஷம் ஸம்பாஷணை செய்துபார்க்கட்டும். அப்போது யாருக்குத்திறமை குறைவு என்பது தெளிவாகும். மதவிஷயங்களில் ஒருகால் இந்துக்கள் சிற்சில சமயங்களில் மூடநம்பிக்கை யுள்ளவராக இருக்கலாம். ஆனால் மதவிஷயங்களுக்கும் நவீனசாஸ்திர ஆராய்ச்சிக்கும் ஒன்றுகொன்று விரோதமாகாது. மதவிஷயங்கள் அநேகமாய் நம்பிக்கையையே காரணமாகக் கொண்டுள்ளன. ஆனால் சாஸ்திர விஷயங்களோ இவ்வுலகிலுள்ள பொருள்களைக் காரணமாய்க் கொண்டுள்ளன. மேலும் சாஸ்திரங்களை நன்றாய் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு, நம்பிக்கையா லுண்டாகும் மதவிஷயங்கள், நாளடைவில் பிரத்யக்ஷ ரூபமாகத்தெளிவடைந்து அவைகளும் நிரூபிக்கப்படும்படியான நிலையை அடைந்துவிடுகின்றன. இதற்கு உதாரணம் ஸர் ஜெ. ஸி. போஸைவிட வேறொருவரும் நமக்குத்தேவையில்லை. (தொடரும்.)

K. நடேச அய்யர், B. A. L. T.,
சித்தூர்.

---

ஸ்ரீ

## கல்விக் குறிப்புகள்.

நமது இளைஞரும் யோகினிக் கதைகளும்:—மனோதத்துவ சாஸ்திரத்தில் வல்ல பால்பான்ஸ்பீல்டு (Paul Bonsfield) என்பவர் நமது பாலக பாலிகைகளுக்கு ஆரம்பத்தில் மேற்கண்ட கதைகளைச் சொல்வது கூடாதென்றும், நமது பிள்ளைகள் தங்களுடைய அனுபவ பூர்வமாய்த் தமது பஞ்சேந்திரியங்களினால் உலகத்தில் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுபவைகளை நன்கறிந்து மனத்தி லமைத்துக்கொண்ட பின்பே அவ்விதக்கட்டுக் கதைகளை அவர்களுக்குச் சொல்லவேண்டுமென்றும் கூறுகின்றார். ஏனெனில், அக்கதைகளில் காணப்படும் முக்கியமான வீர

சூர மார்த்தாண்டர்களா யிருப்பவர்களோடு கொஞ்சமேனும் நம்பமுடியாதனவும் மனத்தோற்றத்தினளவிலல்லது உண்மையாகக் காணக்கூடாதனவுமான சந்தர்ப்பங்களில் நமது இளைஞர் தம்மை ஒருமை உடன்பாடாக்கிக்கொள்ளுகின்றனர். ஆகவே கதைகளில் அவர்களுக்கு விசேஷ பிரியத்தை யுண்டுபண்ணவும், அவர்களது மனோதர்மத்தை வளர்க்கவும், அத்தகைய வழிகள் ஏற்றவையல்ல வென்றும், சரித்திரத்தில் நிறைந்து விளங்கும் பெரிய தேசாபிமானிகளும், உலகத்தாருக்கு எப்போதும் உபயோகப்படுமாறு அற்புத அதிசய விஷயங்களைக் கண்டுபிடித்தவர்களும், மற்றுமுள்ள பெரியோர்களும் ஏற்ற சாதனங்களாவார் என்றும் வற்புறுத்துகிறார். அவரது வாதம் இரண்டு முக்கியகாரணங்களைப் பற்றியது. எங்ஙனமெனில், ஆச்சரியமானவற்றையே விரும்பி அவாவும்படியான மனப்போக்கையுடைய சிறுவர்களுக்கு அத்தகைய பெரியோரது சரித்திரங்களில் அவர்களதுமனதைக் கவரும்படியான சந்தர்ப்பங்களும் செய்கைகளும் நிறைந்து கிடக்கின்றன. இரண்டாவது, அப்பெரியோர்களது ஜீவியங்களில் நடந்த உண்மையான நிகழ்ச்சிகளையும் அனுபவங்களையும் ஆராய்ந்தறியும் வகையில், பொய்யானவைகளை உண்மையாக மதிக்கும்படி தூண்டும் பேய் பிசாசக்கதைகளைப் போலல்லாமல், உண்மை யனுபவங்களின் வழியிலேயே அவர்களது மனோதர்மத்தைச் செலுத்தி வளர்க்கச் சாத்தியப்படுகின்றது. ஆகவே, நமது உபாத்தியாயர்களும் பிள்ளைகளைப் பெற்றோரும் அவ்விதக் கதைகளைப் புகட்டாது மேற்கண்டவிதம் அவர்களைப் பயிற்றுவாராக.

* * *

ஆடவர்கல்வி:—தற்போதைய இந்தியாவின் நிலைமையில் நமக்குப் புதிதாய்க்கிடைத்திருக்கும் 'வோட்' சுதந்தரத்தை ஒழுங்காய் உபயோகப் படுத்தவும், நமது சுகாதாரத்தையும் சௌக்கிய ஜீவியத்தையும் கவனிக்கவும், நமக்கும் கவர்ன்மெண்டாருக்கும் பரஸ்பரமுள்ள கடமைகளையும் சுதந்தரங்களையும் நன்கறிந்து நமது பொறுப்பை நாம் சரிவரச் செலுத்தவும், இன்னும் பலதுறைகளிலும் தத்தமது தொழில்களை ஒழுங்காய்ச் செய்யவும் நமது ஆடவர்களுக்குக் கல்வி அவசியம். அத்தகைய கல்வி போதிக்கும் முறையில் மேல் நாட்டார் நம்மைவிட விசேஷ மேம்பாடடைந்திருக்கிறார்கள். அவ்விதமே நாமும் முயலல் வேண்டும். வேலை முடிந்ததும் இராப்பள்ளிக்கூடங்களுக்குச் சென்று கல்வி பயிலும்படி செய்வது ஒருவகை. பாமரர்களுக்குப் போதிக்கத்தக்க வல்லமையுடையவர்களைக் கிராமங்களுக்கும் பிறவிடங்களுக்கும் அனுப்பி உபந்நியசிக்கச் செய்வதும், உபந்நியாசத்தோடு கண்காட்சிப் படங்களை இயைத்துக் காட்டுவதும் மற்றொரு வகையாகும்.

**சுகாதார வாரம்,**—சுகாதாரவாரம் எனக் கிராமங்களில் வைத்து சுகாதாரத்தின் அவசியத்தையும் அனுகூலத்தையும், குடியின் கெடுதியையும் அதனால் குடும்பங்களழிவதையும், குடியர்களுடைய குழந்தைகள் கதியின்றித் திரிந்து கேடுறும் அலங்கோலத்தையும், இன்னும் பலவற்றையும், சித்திரப் படங்களாக எழுதிப் பலரும் பார்த்தறியும்படி பலவிடங்களில் ஒட்டி வைப்பதும், பள்ளிக்கூடப் பிள்ளைகள் கையில் அத்தகைய படங்களைக் கொடுத்து ஊரில் வலம்வரும்படி செய்வதும் பிறவும், மேற்கண்ட விஷயங்களின் அத்தியாவசியத்தை ஜனங்களுக்கு நன்கு புலனாகும்படி செய்வனவாகும். அத்தகைய முயற்சியில் பள்ளிக்கூடப் பையன்களும், சுகாதார வுத்தியோகஸ்தர்களும், ஸ்தலஸ்தாபன அதிகாரிகளும் விசேஷ சிரத்தை காட்டி உழைத்தால் நன்மை யுண்டாகும். கிராமத்தாரின் கல்வி விருத்தியை முதன்மையான லக்ஷியமாகக்கொண்டு, விடுமுறை காலத்தில் கிராமங்களுக்குச் சென்று ஊழியஞ்செய்ய முற்பட்டிருக்கும் கல்லூரி மாணவரியக்கமும் அதற்குக் காரணராயிருக்கும் கனம். சுப்ரமணிய அய்யா அவர்களும் தேசத்தொண்டு செய்ய ஆரம்பித்துள்ள முயற்சி பாராட்டர்பாலது. அத்தகைய இயக்கங்கள் பலவிடங்களிலும் நியமிக்கப் படவேண்டும்.

* * *

இங்கிலாந்தில் இலவச உயர்தரப் படிப்பு:—தொழிலாளிகள் இங்கிலாந்தில் ஆட்சி புரிந்தபோது கல்வியிலாகாவின் தலைமை வகித்த கனம் ட்ரவெல்யன் என்பவர் உயர்தரப் பள்ளிக்கூடங் (ஹைஸ்கூல்) களில் கல்வி இலவசமாய்க் கொடுக்கும்படி திட்டஞ்செய்தார். அதன் முடிவாக இங்கிலாந்தில் அநேக விடங்களில் உயர்தர பள்ளிக்கூடங்களில் அத்தகைய நலங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

* * *

உபாத்தியாயர்களும் கல்விச் சட்டதிட்டங்களும்:—கல்வி யிலாகாவில் செய்யப்படும்படியான பெரிய சட்ட சீர்திருத்தங்களும், புதுச் சட்டங்களும், கல்விபோதிக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பவரும் கல்வி சம்பந்தமான விஷயங்களில் தக்க ஆதாரப்பிரமாணங்களோடு எடுத்துச் சொல்லத் தகுதியுடையவருமான உபாத்தியாயர்களது உதவி ஒற்றுமைப்பில்லாமலேயே செய்யப்பட்டு வருவது விசனிக்கத்தக்கது. அவ்விதமின்றி, இனியாவது உபாத்தியாயர்களுடைய ஆழ்ந்த அனுபவ பூர்வமான ஆலோசனை அபிப்பிராயங்களைத் தழுவி கல்வி சீர்திருத்தம் செய்ய அதிகாரிகள் முற்படவேண்டுமென்பது உபாத்தியாய வர்க்கத்தினரின்

அபிப்பிராயம். அவ்வித அபீஷ்டத்தை நமது தேசக்கல்வி முற்போக்கின் நிமித்தம் அதிகாரிகள் நிறைவேற்றுவார்களென நம்புகிறோம்.

* * *

**விவசாயக் கல்வி:**—தொழிற்கல்விக்கும் விவசாயக்கல்விக்கு முள்ள வித்தியாசம் முதன்மையாக ஒன்றுண்டு. அதாவது தொழிற் சாலைகளும் சங்கங்களும் பங்கு எடுத்துக்கொண்டிருக்கும் பாகஸ்தர்களா லல்லாமல் ஒருசிலராகிய மானேஜர்களாலேயே முழுப்பொறுப்போடும் அதிகாரத் தோடும் நடத்தப்படுகின்றன. ஆகவே தொழிற் சீர் திருத்தங்கள் செய்ய வேண்டின் அம்மானேஜர்களைத் திருத்தி ஒழுங்குபடுத்தவேண்டும். ஆனால், விவசாயத்தில் அப்படியல்ல. உழுது உழைக்கும் குடியானவனே அதற்கு ஆதார பூதனுயிருக்கிறான். ஆகவே, விவசாய விர்த்தி சீர்திருத்தங்க ளெல்லாம் பயிர்த்தொழில் செய்யும் கிருஷிகளையே பற்றியதாயிருக்க வேண்டும். ஆதலால் விவசாயத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டுமானால் பயிர்த்தொழில் செய்பவனது மனோபாவத்தையும் முறைகளையும் மாற்ற வேண்டும். ஆனால் நமது விவசாயக் கல்லூரிகள் அத்தகைய உதவி செய்யத் தக்கனவாயில்லை. ஆகவே, நமது முக்கிய தேவை என்னவெனில் விவசாயப் பள்ளிக்கூடங்கள் பலவிடங்களில் ஸ்தாபிக்கப்படவேண்டி யதும், சாதாரண பள்ளிக்கூடங்களில் விவசாயத்தைப் பற்றிய அறிவும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டப்படவேண்டியதுமாகும். மேலும், நமது கிராமப் பள்ளிக்கூடங்களில் விவசாயத்தைப் பற்றிய விஷயங்களைப் புகட்டும்படி திட்டஞ்செய்வதும் அவசியமானது.

எ சௌரிராஜுலு நாயுடு,
பி. எ. எல். டி.

---

## புருஷார்த்தம்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி).

ஏழைகளுக்குக் கொடுப்பதிலும் அவர்களை ஏழைகளாகாமற் காப்பது பேரறமாம். நம் நாட்டில் ஏழைகள் பெருகுவதற்குக் காரணம் கைத் தொழில்களை ஆதரிப்போரில்லாமை. புகைவண்டி, மோடார்வண்டி, நெசவுஇயந்திரம், நெல்குத்தும் இயந்திரம் முதலிய மேனாட்டு இயந்தி

ரங்கள் யாவும் ஏழைகளுயிர் பருக வந்த இராக்ஷச வடிவங்கள். ஆதலின் தருமகுணமுள்ளோர் பலவகையினும் இயந்திரங்களால் செய்யப்பட்ட பொருள்களை உபயோகிக்காமல் கைத்தொழில்களால் செய்யப்பட்ட பொருள்களையே உபயோகிக்க முயலல்வேண்டும்.

"அறஞ் செய்வார் இம்மை மறுமைகளி லின்புறுவார்; அல்லாதார் துன்புறுவார். இவ்வுண்மையைப் பல்லக்குச் சுமப்போனுக்கும் அதி லேறிச் செல்லுவோனுக்கும் இடைநின்ற வித்தியாசத்தினு லநுமானித் துணர்க" என்னுங் கருத்தமைய நாயனுர் கூறிய:

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

என்னுங் குறளினுல் அறத்தின் பயனை ஆராய்ந்தறிக. சென்ற பிறப்பில் பண்ணுர் மொழியார் பாலடிசில் பசும்பொற் கலத்தில் பரிந்தூட்ட உண்ணு நின்றபோது ஒருவருக்கும் உதவாதிருந்த செல்வர்தான் இப் பிறப்பில் மண்ணுர் சட்டி கரத்தேந்தி மரநாய் கவ்வுங் காலினராய் அண்ணுந் தேங்கித் திரிந்திரக்கின்றவர் என்பது:

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

என்னுங் குறுவெண்பாவினுற் றெளிவாம். அறத்தினியல்பை அதிகம் அறியும் விருப்புளோர் மநுதர்ம சாத்திரத்தையும், வள்ளுவர் குறள் அறத்துப் பாலையும் வாசித்துணர்தல் சாலும்.

## 2. பொருள்.

இம்மை இன்பத்துக்குச் சாதனமாக வறிந்து விரும்பிச் சம்பாதிக்கப் படுகிற மனைவி, மக்கள், பூமி, பசு, ஏவலாள், வீடு, தானியம், பொன் முதலியவற்றின் சமுதாயம் பொருள் எனப்படும். நன்மார்க்கத்தில் சம்பா திக்கப்பட்ட பொருள்தான் தன்னை யுடையவனுக்கு இன்பசாதனமா மாதலின் ஔவையார் "தீவினை விட்டீட்டல் பொருள்" என்றூர். கல்வி, புகழ், வெற்றி, ஊண், உடை, உறையுள் முதலிய எல்லாவற்றையும் வேண்டியவாறே யளிக்கவல்ல கற்பதரு பொருளே யாமென்பது:

வென்றி ஆக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யுங்கல்வி யோடழ காக்கலும்
குன்றி னூர்தமைக் குன்றென ஆக்கலும்
பொன்றுஞ் சாகத்தி னுய்ப்பொருள் செய்யுமே.

என்னும் சீவக சிந்தாமணிச் செய்யுளால் நன்கு விளங்கும். வறிஞன் இவ்வுலக வின்பத்தி லெதனையு மநுபவித்த லியை யாது. "திரைகட லோடியுந் திரவியம்தேடு" என்று கொன்றை வேந்தன் கூறுவதை மனத்திற்கொண்டு ஒவ்வொருவரும் இப்பொருளைத் தேடவருந்தி முயலல் வேண்டும்.

கல்வி கேள்விகளினால் வளர்ந்த நுண்ணறிவும், நல்லோர் நட்பும், சீரிய ஒழுக்கமும், உடையவனாய் மெய்வருத்தம் பாராமலும், பசிநோக்காமலும், கண்துஞ்சாமலும்கூட தன் காரியத்திலேயே கண்ணுகச்சலியாத ஊக்கத்தோடு முயல்பவனைப் பொருள் தானே தேடிச் சென்றடையு மென்பது:

> ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்க முடையா னுழை.

என்னும் பொய்யா மொழியாற் புலனாம். "குந்தித்தின்றால் குன்றும் மாளு" மாகலின், சிறிது பொருள் சேகரித்தோன் இது போதுமென்று அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டிப்பாழாக்காமல் அதை மேன்மேலும் வளர்க்கக்கடவன். பெட்டியில் வைக்கப்பட்ட பொருள் குறையும் பொருளாம். க்ஷேம நிதிகளிலும், நகைகளிலும், வீடு நிலம் முதலியவற்றிலும் இடப்பட்டபொருள் நிலைப்பொருளாம். வியவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றில் உபயோகப் படுத்தப்படும் பொருள் வளரும் பொருளாம். வட்டிக்குவிட்டுப் பொருள் வளர்ப்பது தென்னை பனை முதலிய மரங்களைக் கள்ளுக்கு விடுவதுபோல பாபகாரியம்.

இங்ஙனம் முயன்று தேடிய பொருளை வீண்செலவு செய்யாது காப்பாற்றித் தானு மனுபவித்து நன்மார்க்கத்தில் செலவிட வேண்டும். நன்மார்க்கத்தில் செலவிடலாவது "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பதற்கிணங்க சுற்றத்தாரில் தாழ்ந்தோர்க் குதவுதல், பசித்தோர்க் குணவிடல், கல்வி கற்போர்க்கு வேண்டிய உதவி புரிதல் முதலியனவாம். அடக்கமும் ஈகையும் செல்வத்திக்கு அரணும்; இரும்புக்கதவுகளும் காவற்காரர்களும் மாத்திரம் காவலாகா. உலோபியின் வீட்டிலேயே கள்வன் புகுவன். பொருளைச் சேகரிப்பது தானு மநுபவித்துப் பிறர்க்கும் ஈவதற்கே யன்றி சேர்த்துவைத்துத் தேனீப்போலிழந்து வருந்துவதற்கன்று. பிறக்கும்பொழுது கொண்டுவந்ததில்லை இறக்கும் பொழுதும் கொண்டுபோவதில்லையாயின் பொருளை நாமிருக்கும் பொழுதே நல்லகாரியங்களில் செலவிடல் வேண்டும். வருவாய்க்குத்தக்க செலவுசெய்து, உற்றிடத்துதவியாகும் பொருட்டு அவ்வப்போது சிறிது

பொருளைச் சேர்த்துவைப்பது நன்று. கடன் படுதல் ஆகாது. பொருளில்லாதவன் கூலித்தொழில் செய்க; பிச்சை எடுக்கினும் எடுக்க; பசியால் வருந்தி இறக்கினும் இறக்க; ஆனால் அவமானத்தையும் மனோவியாதியையும் தரும் பெரு வியாதியாம் கடனுக்கு ஆளாகாதிருக்கக் கடவன். "கடனுண்டு வாழாமை காண்டலினிதே" என்றார் பூதஞ் சேந்தனார்.

பெற்றோர் தமது புதல்வர்க்குக் கல்விப்பொருளைக் கட்டாயம் ஈதல் வேண்டும். கல்வி யில்லாத புத்திரனுக்குச் செல்வம் வைத்தல் குழந்தை கையில் கொலை செய்யுங்கூரிய வாளீதல்போலும். செல்வனது மகன் கல்வி யில்லாதவனாயின் குடியனாகவாவது சூதனாகவாவது ஆதல் திண்ணம். ஆனால் நானிங்கு தற்காலக்கல்வியைக் குறிப்பிடவில்லை. ஏனெனின் இம்மேனாட்டு முறைக்கல்வியே ஒரோவிடத்து குடியையும், சூது முதலான பல தூர்ப்பழக்கங்களையும் பயிற்றுவிக்கின்றது என்பது எனது அபிப்பிராயம். இக்கல்விக்குப் பணச்செலவு அதிகமாயினும் கலாசாலைப் பரீக்ஷையில் தேர்ச்சி யடைந்தவனும் கூட சுதந்திர ஜீவனத்துக்கு வழியற்று யாரேனும் எனக்கு இருபது ரூபாய் சம்பளம் கொடுப்பார்களா என்று பிறர்கையை எதிர்பார்த்து நிற்கின்றான். ஆதலின் கல்வி முறை திருத்தி யமைக்கப்படுதல் வேண்டும். (தொடரும்).

சா. கந்தசாமி முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

---

## முகம்மதிய அரசனும் ஹிந்து அமைச்சனும்.

(**14**-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒருநாள் அக்பரும் பர்பலும் ஓர் வீதியில் போய்க்கொண்டிருக்கும் பொழுது எதிரே ஒரு பசுமந்தை வருவதைக்கண்ட அக்பர் தன் மந்திரியைப்பரீக்ஷிக்க நினைத்து திடீரென எதையோ நினைத்துக்கொண்டவர் போல பர்பலைப் பார்த்து "மந்திரீ! நமது ராஜ்யத்தில் எவ்வளவு பசுக்கள் இருக்கின்றன சொல் பார்ப்போம்" என்றார். அதற்கு உடனே பர்பல் தான் அப்போதுதான் கணக்குப் பார்த்துவைத்தவர்போல கொஞ்சமும் யோசனை செய்யாமல், "இதுகூடத் தெரியாதா என்ன? அயல் தேசத்தி

விருந்து நம் ராஜ்யத்திற்கு விருந்தாளிகளாக வந்திருக்கிறவைகளையும், நம் தேசத்திலிருந்து அயல் தேசத்திற்கு விருந்துக்காகப் போயிருப்பவைகளையும் தள்ளி, பாக்கி மூன்று லக்ஷத்து பதினுயிரத்து அறுநூற்றிருபத்தைந்து பசுக்கள்'' என்று சொன்னார். அதை எப்படி மறுப்பதென்று தெரியாமல் அரசன் மௌனமாய் அரண்மனையை அடைந்தார்.

மற்றொருநாள், நம் மந்திரியை எப்படியாவது நாம் பேசமுடியாமல் தலை குனியும்படி செய்துவிடவேண்டும் என்று ஆவல்கொண்டு, அக்பர் தன்னை பர்பல் காலையில் பார்க்கவரும் சமயம் பார்த்திருந்து அவர் வந்ததும் ஏதோ ஓர் பெரியவிஷயம் சொல்லப்போவதுபோல், "நண்பரே! நான் நேற்று ஒரு கனவல்லவா கண்டேன். அதில் நீர் ஓர்பெரிய மலக்குழியில் விழுந்து கிடந்ததாகவும் நான் உம்மை அதினின்றும் தூக்கிவிட்டதாகவும் கண்டேனே. என்ன விஷயம்?'' என்று பரிகாசமாகக் கேட்டார். உடனே பர்பல், "பிரபுவே! நீங்கள் சொல்வது முற்றும் உண்மையே. நானும் அப்படியேதான் கனவு கண்டேன். ஆனால் நீங்கள் கனவில் பாக்கியை ஏன் விட்டு விட்டீர்கள்?'' என்றார். "என்ன பாக்கி?'' என்று அரசன் கேட்க, "என்னை மலக்குழியினின்றும் தூக்கிவிட்ட பிறகு தங்கள் வஸ்திரத்தினால் என்சரீர முழுமையும் சுத்தம் செய்து எனக்கு நீங்கள் செய்த சிகிச்சை முதலியவைகளை நீங்கள் ஏன் சொல்லவில்லை?'' என்று புன்சிறிப்புடன் சொன்னார். தன்னை வேலைக்காரனெனஏளனம் செய்கிறாரென்றறிந்த அரசன் அவமானத்தால் தலை குனிந்து கோபித்துக் கொள்ளுவதா அல்லது சந்தோஷிப்பதா என்று தெரியாமல் தத்தளித்தார்.

பர்பல் புகையிலை உபயோகிப்பது வழக்கம். அக்பர் உபயோகிப்பதில்லை. இக்கெட்ட பழக்கத்தினின்றும் பர்பலை விலக்கிவிட வேண்டுமென்று அக்பருக்கு இச்சை. ஒருநாள் இவர்களிருவரும் ஒரு தேயிலைத் தோட்டத்தின் வழியாகப் போகவேண்டி யிருந்தது. அந்தச்சமயம் அங்கே சில கழுதைகள் ஓரங்களிலுள்ள புல் பச்சைகளை மேய்ந்து கொண்டிருந்தன. இதைக்கண்ட அக்பர் இதுதான் தனக்குத்தக்க தருணம் என்று நினைத்து, "மந்திரீ! இங்கே பார்த்தீரா? இந்தக் கழுதைகள்கூட புகையிலையை அபேக்ஷிக்கின்றன இல்லையே. மனிதர்களாகிய நாமேன் அதை விரும்பவேண்டும்? என்று பரிகாசமாகக் கேட்டார். அதற்கு பர்பல், ''ஆம் பிரபு, கழுதைகள்தான் புகையிலையை அபேக்ஷிக்கிறதில்லை. நாம்கூடக் கழுதைகளா வென்ன அதை விரும்பாமலிருக்க?'' என்று மறுமொழி அளித்தார். மந்திரியைக் கழுதையாக்கப்போய் தானே கழுதை யாகும்படி நேர்ந்ததை நினைத்து அரசன் அவமானமடைந்தார்.

அக்பர் பர்பலுக்கு கொஞ்சம நிலமும் ஐச்வர்யமும் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். ஆனல் ஏதோ காரணத்தினுல் அதை நிறைவேற்ருமல் காலதாமதம் செய்துவந்தார். பர்பலும் கொஞ்சநாள் அதை எதிர் பார்த்தும் கிடைக்காததால் அதைப்பற்றிக் கேட்கவுமில்லை. இப்படி யிருக்க ஒருநாள் அரண்மனைவாசலில் ஒரு ஒட்டகம் வந்து நின்று கொண்டு தனது மேல்மெத்தைவரையில் கழுத்தை நீட்டி நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு அக்பர் தன் மந்திரியைப்பார்த்து, "பர்பல், இந்த ஒட்டகம் ஏன் இவ்வளவு கழுத்தை வளைத்துக்கொண்டு சிரமப்படுகிறது?" என்று கேட்க, உடனே பர்பல், "அதற்கும் யாராவது ஏதாவது கொடுப்பதாகச்சொல்லிவிட்டுப் பிறகு ஏமாற்றி யிருப்பார்கள். அதனுல்தான் அது இவ்வளவு சிரமப்படுகிறது." என்று விடையளித்தார். அன்று மாலை பர்பல் வீட்டுக்குப் போனபோது அரசனுல் வாக்களிக்கப்பட்ட நிலமும் ஐஸ்வர்யமும் தனக்கு உடனே கொடுக்கப்படவேண்டுமென்று அரசன் பொக்கிஷதாரருக்கு உத்திர வளித்திருப்பதைக் கண்டார்.

அக்பர் பர்பலிடத்திலிருந்த அதிக பிரியத்தினுல் அவரும் முகம்மதிய மதத்தைச் சேர்ந்துவிட்டால் நலமாயிருக்குமென்றெண்ணி, "பர்பல், நீர் முகம்மதிய மதத்தைச்சேர என்ன ஆக்ஷேபம்? நீரேன் இப்போதே முகம்மதியராகக்கூடாது? என்று கேட்டார். "நான் சேரத்தடையில்லை. ஆனல் ஒரு விஷயம் நான் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு ஒருவாரம் வாய்தா கொடுக்கவேண்டும். பிறகு உங்களிஷ்டம்போல் நடக்கிறேன்" என்று விடை யளித்தார் பர்பல். "சரி, அப்படியே ஆகட்டும்" என்று அக்பர் சொல்ல, அவரிடம் விடை பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம்போய் நான்கு நாட்கள் நிம்மதியாக இராஜாங்கக் கவலையற்று இளைப்பாறிவிட்டு, ஐந்தாவது நாள் அங்கேயுள்ள அம்பட்டரில் நால்வரைக் கூப்பிட்டு, "ஏ, மடையர்களா! உங்களுடைய தொழிலுக்கேற்றபடி உங்களுக்குக் கொஞ்சமேனும் புத்தியென்பதே கிடையாது. அரசன் உங்களையெல்லாம் முகம்மதிய மதத்தில் சேர்ப்பதாகத் தீர்மானம் செய்திருக்கிருர். நீங்கள் கொஞ்சங்கூட கவலையின்றித் திரிகின்றீர்களே" என்று அவர்களுக்கு நன்மையைப் போதிப்பவர்போல சொல்லிவைத்தார். உடனே அவர்கள் கலவரமடைந்து மற்றவர்களையும் ஒன்று சேர்த்து ஆலோசனை செய்து, "நம்மரசன் மத வித்தியாசமின்றிச் செங்கோல் நடத்துபவரெனப் பெயர் பெற்றவராயிற்றே. இவரே இப்படி செய்வதென்ருல் நாம் என்னசெய்வது? வந்தது வரட்டும். அவரிடமே போய் முறையிட்டுக் கொள்வோம்" எனத்தீர்மானித்து எல்லோரும் ராஜ சபையை அடைந்து அரசனிடம் தங்கள் குறைகளைச் சொல்லத் தலைப் பட்டனர். இவர்கள் சொல்வதைக்கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்த அரசன்

"இது என்ன புதுமை! உங்களுக்கு யார் இந்த விஷயம் தெரிவித்தது? என்னுடைய ராஜ்யத்தில் உங்களை முகம்மதிய மதத்தில் சேரும்படி கட்டாயப்படுத்துகிறவர்கள் யாரா யிருந்தாலும் அவர்களை சிரச்சேதம் செய்வேன்'' என்று சினந்து சொல்லிக்கொண் டிருக்கும்போதே பர்பல் அங்கு தோன்றி, "அரசே, பார்த்தீர்களா! இந்த இழிந்த ஜாதியைச் சேர்ந்தவர்களே தங்கள் மதத்தில் இவ்வளவு பற்று வைத்திருப்பார்களானால் எனக்கு என்மதத்தில் எவ்வளவு அபிமானம் இருக்கவேண்டும்! இதை யறியாமல் நீங்கள் என்னை உங்கள் மதத்தில் சேரச்சொன்னீர்களே! "என்றுரைத்தார். அதைக்கேட்ட அரசன் மிகவும் வெட்கி மனம் நொந்து தான் செய்தது பிசகு என்று பர்பலிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அன்றுமுதல் மதவிஷயமாக அவரிடம் பேசுவதில்லை என்பதாகத் தீர்மானம்செய்து கொண்டார். பர்பலும் தன்னிடத்திலிருந்த அதிகப்பிரியத்தினால் அரசன் அம்மாதிரி கேட்க நேர்ந்ததெனத் தெரிந்து கொண்டு தன்னை அறியாமலே அரசனுக்கு வருத்தத்தை உண்டு பண்ண நேர்ந்ததைப்பற்றித் துக்கித்துத் தன்னுடைய புத்தி சாதுர்யத்தால் அவரை உத்ஸாகப்படுத்திப் பிறகு ஆயுட்காலம் முடிய அவருடைய இணைபிரியாத நண்பனாக இருந்தார்.

K. நடேச அய்யர், B. A. L. T.,
சித்தூர்.

---

## வேதாந்த சாத்திர விசார சங்கிரக வினாவிடை.
## இராம கிருஷ்ண சம்பாஷணை.

(20-ம் பக்கத் தொடர்ச்சி).

இராமன்:—மைத்திரீ, கருணை, முதிதை, உபேட்சை என்னும் நான்கு குணங்களும் பரமேசுவரனது கருணையால் கிடைக்குமாயின் அக்கருணை எதனால் கிடைக்கும்?

கிருஷ்ணன்:—கருமத்தினால் கிடைக்கும்.

இரா:—கருமம் என்றால் என்ன?

கிரு:—கருமம் என்பது வேலையாம்.

இரா:—அது எத்தனை வகைப்படும்?

கிரு:—அது மனசினுல் செய்யும் கருமம், வாக்கினுல் செய்யும் கருமம், காயத்தால் செய்யும் கருமம் என மூன்று வகைத்தாம்.

இரா:—இம்மூன்று கருமத்தையும் விளக்கமாகக் கூறல்வேண்டும்.

கிரு:—மனசினுற் செய்யுங் கருமம் நினைத்தல், அறிதல், சிந்தித்தல், அபிமானித்தல், என்பனவாம். உவத்தல், வெறுத்தல், தியாகித்தல் முதலிய கருமமனைத்தும் இவற்றுள் அடங்குவனவாம். வாக்கினுற் செய்யும் கருமம் இன்சொற்கூறல், வன்சொற்கூறல், முதலியனவாம். ஈசுவரனைப் புகழ்தல், இகழ்தல், சாஸ்திரத்தைப் புகழ்தல், இகழ்தல், படித்தல் முதலிய கருமமனைத்தும் இவற்றுள் அடங்குவனவாம். காயத்தினுற் செய்யும் கருமம் நடத்தல், ஓடல், எழுதல், விழுதல் முதலியனவாம். ஈசுவரனை வணங்கல், பரமேசுவரனது ஆலயத்தை வலம் வரல் முதலிய கருமங்கள் இவற்றுள் அடங்குவனவாம்.

இரா:—இக்கருமங்கள் தொகையாக நோக்குமிடத்து எத்தனை வகையாம்?

கிரு:—அவை விகித கருமம், நிஷித்த கருமம் என இருவகையாம்.

இரா:—விகித கருமம் என்றுல் என்ன?

கிரு:—வேதம் புருஷனது பிரவிர்த்தியின் பொருட்டு எதன் சொரூபத்தைப் போதிக்கிறதோ அது விகித கருமமாம்.

இரா:—நிஷித்த கருமம் என்றுல் என்ன?

கிரு:—வேதம் புருஷனது நிவிர்த்தியின்பொருட்டு எதன் சொரூபத்தைப் போதிக்கின்றதோ அது நிஷித்த கருமமாம்.

இரா:—மேற்கூறிய மனே வாக்குக் காய கருமங்களுள் எவை விகித கருமமாம்? எவை நிஷித்த கருமமாம்?

கிரு:—நல்லன நினைத்தல், நல்லன சொல்லல், நல்லன செய்தல் விகித கருமங்களாம். தீயன நினைத்தல், தீயன சொல்லல், தீயன செய்தல் நிஷித்த கருமங்களாம்.

இரா:—அழுக்குருட்டல், துரும்புகிள்ளுதல், நீரடித்தல் முதலிய கருமங்கள் விதி, நிஷித்த மென்னும் இரண்டு கர்மங்களுள் எதனுள் அடங்கும்?

கிரு:—இவை பயன் தருவன வல்லாத செயல்களாயும், ஆன்றோரால் பழிக்கப்படுவேனவாயும் இருத்தலின் நிஷித்த கருமத்துள் அடங்குவனவாம்.

இரா:—இயல்பாகவே நடத்தல், நீராடல், முதலிய கருமங்கள் மேற்கூறிய இரண்டனுள் எதனில் அடங்கும்?

கிரு:—அவை புண்ணிய எதுவாயின் விகித கருமத்திலும், பாப எதுவாயின் நிஷித்த கருமத்திலும் அடங்கும்.

இரா:—விகித கருமம் எத்தனை வகையாம்?

கிரு:—அது பிராயச்சித்தம், காமியம், நைமித்திகம், நித்தியம் என நான்கு வகைத்தாம்.

இரா:—பிராயச்சித்த கருமமாவது யாது?

கிரு:—பாப நாசத்தின்பொருட்டு வேதத்தால் விதிக்கப்பட்ட கருமம் பிராயச்சித்தமாம். சன்யாசி ஒருவன் பிரமாதத்தினுல் திரவியத்தைப் பிறரிடமிருந்து கிரகிப்பானுயின் அது அவனுக்குப் பாபகருமமாம். அப்பாபம் நீங்க அவன் திரவியத்தைத் தியாகஞ் செய்து மூன்றுநாள் உபவாசமிருத்தல் பிராயச்சித்த கருமமாம்.

இரா:—காமிய கருமமாவது யாது?

கிரு:—ஒரு பலனை அடைதற்பொருட்டு வேதத்தால் விதிக்கப்பட்ட கருமம் காமிய கருமமாம். மழையை விரும்புகின்றவன் செய்யும் காரீரி யாகமும், சுவர்க்கத்தை விரும்புகின்றவன் செய்யும் அக்கினிஹோத்ரம், சோமயாகம் முதலியனவும், பிரஹ்ம லோகத்தை விரும்புகின்றவன் செய்யும் பிரணவத்தியானம் முதலியனவும் காமிய கருமமாம்.

இரா:—நைமித்திக கருமமாவது யாது?

கிரு:—ஒரு நிமித்தத்தைக் கொண்டு வேதத்தால் விதிக்கப்பட்ட கருமம் நைமித்திக கருமமாம். கிரஹண காலத்தில் சமுத்திர ஸ்நானம்

செய்தல், கல்வி யறிவு ஒழுக்கங்களால் மேம்பட்டவர் வந்த காலத்து எழுந்திருத்தல், சிரார்த்தஞ் செய்தல் முதலியன நைமித்திக கருமங்களாம்.

இரா:—நித்திய கருமமாவது யாது?

கிரு:—தினந்தோறும் செய்யவேண்டுமென்று வேதத்தால் விதிக்கப்பட்ட கருமம் நித்திய கருமமாம். ஸ்நானம், சந்தியாவந்தனம், ஈசுவர பூஜை முதலியன நித்திய கருமங்களாம்.

இரா:—நிஷித்த கருமத்தை விளக்கமாகப் பிரித்துக் கூற வேண்டும்.

கிரு:—பிரஹ்மசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன்; சன்யாசி என்பவர்கள் தமக்குரிய கருமத்தைச் செய்யாது, பிரமாதத்தினால் வேறு கர்மத்தைச் செய்வாராயின் அவை நிஷித்த கருமமாம். நிஷித்த கருமமனைத்தும் காதல் (வியபிசாரம் செய்தல்), கவரூடல் (சூதாடல்), கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல், பிராணிகளை இம்சித்தல், பிறர்பொருளை அபகரித்தல், பிறரைக் காரண மின்றிக் கோபித்தல் என்றற்றொடக் கத்தனவற்றுள் அடங்கும்.

இரா:—இக்கருமங்களின் பயனைக் கூறல் வேண்டும்.

கிரு:—பிராயச்சித்த கருமத்தைச் செய்யின் பாபம் ஒழிவதாம்; காமிய கருமத்தைச் செய்யின் விரும்பிய பயன் கிடைப்பதாம்; நைமித்திக கருமத்தையும் நித்திய கருமத்தையும் பயன் நோக்கிச் செய்யின் விரும்பிய பயன் கிடைப்பதாம். பயன் நோக்காது ஈசுவரப் பிரீதியாகச் செய்யின் சித்த சுத்தி யுண்டாவதாம். நிஷித்த கருமத்தைச் செய்யின் பாபமே உண்டாவதாம். பாபத்தின் பயன் துக்கமே யாகலின் நிஷித்த கருமத்தை ஒரு போதும் செய்தல் கூடாது.

இரா:—காமிய கருமம் (பயன் நோக்கிச் செய்யும் கருமம்), நிஷ்காமிய கருமம் (பயன் நோக்காது ஈசுவரப் பிரீதியாகச் செய்யும் கருமம்), என்னும் இரண்டனுள் எக்கருமத்தால் ஈசுவரனது கருணை உண்டாகும்?

கிரு:—காமிய கருமத்தைச் செய்வதால் ஈசுவர கருணை உண்டாமாயினும் அது மோக்ஷ சாதன மாவதன்றாம். அதனால், காமிய கரு

மத்தை மோக்ஷ விருப்புடையவர் ஒருபோதும் செய்தல் கூடாது. நிஷ்காமிய கருமத்தைச் செய்யின் மோக்ஷ சாதனமான ஈசுவர கருணை உண்டா மாதலின் நிஷ்காமிய கருமத்தையே செய்தல் வேண்டும்.

இரா:—நிஷ்காமிய கருமத்தைச் செய்பவாது சித்தம் எவ்வா றிருக்கும்?

கிரு:—பரமேசுவர தியானத்தை விடாமல் செய்துகொண்டிருக்கும்.

இரா:—அவர் செயல் எவ்வா றிருக்கும்?

கிரு:—1. துக்கிப் பிராணிகளுக்குத் துக்கம் நீக்க முயலுதல், 2. ஊனுண்டலை ஒழித்தல், 3. இந்திரியங்களை அடக்குதல், 4. பிறர் மனைவியரைப் பெற்ற தாயெனக் காண்டல், 5. பிறருடைமையை அபகரியாமை, 6. உயிர்க்கு உறுதி தருவனவற்றைக் கூறல், 7. உள்ளங் கவர்ந்தெழும் சினத்தை (கோபத்தை) அடக்கல், 8. எவ்வுயிர்க்கும் எவ்வகையாலும் புத்தி பூர்வகமாகத் துன்பஞ் செய்யாமை, 9. பிராணிகளை மறந்துங் கொல்லாமை என் றிவ்வா றிருக்கும்.

இரா:—காமிய கருமம் செய்பவரும் ஈசுவர கருணையைப் பெறுதற் குரியவராவர்; ஆனால், அவர் மோக்ஷ மடைதற் குரியவராகாது பிறந் திறந் துழலுவ ரென்பது உண்மையாயின், காமிய கருமத்தைப் பலர் செய்வதற்குக் காரண மென்ன?

கிரு:—அறியாமையேயாம். சூரபதுமன், சிங்கமுகன், தாருகன், இராவணன், கும்பகர்ணன் முதலாயினோர் காமிய கருமத்தை அறியாமையினா லன்றோ செய்தனர். அவர் செய்த காமிய கருமம் அவர்களுக்கு முடிவில் நாசத்தை யன்றோ கொடுத்தது. அதனால் இவர்களது சரித்திரத்தை நோக்கின் காமிய கருமம் செய்தற்குக் காரணம் அறியாமையே என்பது நன்கு விளங்கும்.

இரா:—நிஷ்காமிய கருமத்தால் ஈசுவர கருணையைச் சம்பூரணமாப் பெற்றவர் யார் யார்?

கிரு:—வேதப் பிரசித்தமா யுள்ள அவர், ஜனகர் அஜாதசத்துரு முதலாயினோரும், லோகப் பிரசித்தமாயுள்ள பட்டினத்தார், பத்திரகிரி முதலாயினோருமாவர்.

இரா:—இதுகாறும் நீ கூறிய வற்றால் பெறப்பட்ட விஷயம் யாது?

கிரு:—நிஷ்காமிய கருமமே செய்யத்தக்கது. ஈசுவரனது கருணை சம்பூரணமாகக் கிடைப்பதற்கு அதுவே காரணமாகும். நீ அடிக்கடி,

நித்தியனை மித்தியகன் மங்கணிட்கா மியமாகப்
பத்தியுறச் செய்வதனால் பாவமெலா நாசமுறும்
ஒத்தியன்மற் றதனானே யொழியாம லுறுசித்த
சுத்தியுள தாமென்று சொல்லுமான் மறையனைத்தும்.

(சூத சங்கிதை).

ஆற்றும் பயன்வேண் டாக்கரும
மந்தக் கரண சுத்தி தரும்
போற்றும் சுத்தி தரும் போதம்
போதம் பிரம நானென்னு
மூற்றந் தரு நா னுதித்தலுமே
யுயர்வான் மதிநீர்த் துளக்கமெனத்
தோற்றந் தருமா யையிற் றன்னைத்
துளக்க மின்றிக் காணுவனால். (பிரபோத சந்திரோதயம்).

என்னு மிச் செய்யுட்களைச் சிந்தனைக்குக் கொண்டுவருவாயாயின் ஈசுவர கருணையை நிஷ்காமிய கருமத்தைச் செய்வதன் மூலமாய் எளிதிற் பெறுதற் குரியவனாவாய். (இன்னும் வரும்).

(சென்னை, இந்து தியலாஜிகல் ஹை ஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும்,
வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய)
கோ. வடிவேல் செட்டியார்.

---

ஸ்ரீ

## சிறுவர் பக்கம்.

### கல்வி.

அன்பர்களே! வந்தனம் நான் உங்களுக்குக் புதியவன். முதல் சந்திப்பு இதுதான். ஆயினும் நான் சொல்வதைக் கவனியுங்கள். நமது

தேசம் வருங்காலத்தில் மேன்மை யடைவதற்கு நீங்கள்தான் காரணரா யிருக்கின்றீர்கள். நீங்கள் கல்வியில் மிகுந்த ஊக்கங் காட்டவேண்டும். கல்வியின் சிறப்பைப்பற்றி நமது முன்னோர்சொன்ன வார்த்தைகளில் சிலவற்றைக் கூறுகிறேன். கவனமாக கேட்டு என்னமோ யாரோ வேலை யில்லாதவன் என்று அலட்சியம் செய்யாமல் மனதில் வைப்பீர்களானல் நன்மை யடைவீர்கள்.

"கல்வியில்லாதவன் கால்மனிதன். கல்வியில்லாதவன் மூடன். படித்தவனுக்கும் படியாதவனுக்கும் முள்ளபேதமானது, மனிதனுக்கும், மிருகத்துக்கும் உள்ள பேதம்போலிருக்கிறது. மனிதருக்கு எண், எழுத்து இவ்விரண்டுமே இரண்டு கண்களாம். படியாதவர் முகத்திலுள்ள கண்கள் கண்களல்ல புண்கள். கல்வி அழகே அழகு; மற்ற அழகு அழகல்ல. கற்றவர்களுக்கு கல்வியே மேலான ஆபரணம்; வேறு ஆபரணம் வேண்டியதில்லை. கல்வியில்லாச் செல்வம் கற்பில்லா அழகு. நல்ல உடுப்பும் நகையுமில்லாத அழகான ஒருபெண்ணுக்கு, எல்லா நகைகளையும் பட்டாடையுமுள்ள குருடி சமான மாவாளா? ஆகமாட்டாள். அதுபோலவே, பட்டாடைகளையும் பொன்னுபரணங்களையும் தரித்திருக்கின்ற படியாதவன், அவைகளில்லாத படித்தவனுக்குச் சமானமாக மாட்டான். அரசனைவிட கற்றவனே சிறந்தவன்; எப்படியென்றால், அரசனுக்கு தன்தேசத்தில் மட்டும் சிறப்புண்டாகும், கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. படித்தவனுக்கு எந்தநாடும் சொந்தநாடாகும், எந்தஊரும் சொந்தஊராகும். ஒருபிறப்பில் ஒருவன் கற்றகல்வியானது எழுபிறப்புகளிலும் அவனுக்குத் துணையாகும். மணல் கேணியைத் தோண்டத் தோண்ட தண்ணீர் ஊறும்; கல்வியைக் கற்கக்கற்க அறிவு ஊறும் (கேணி = கிணறு). கல்வியுள்ள சிறுவன் கனகிழவனே. வித்துவான் தனவான், புத்திவான் பலவான். அஞ்ஞானம் என்னும் வியாதியைப் போக்குவது கல்வி என்னும் மருந்தே. கல்வியானது அறம், பொருள், இன்பம், வீடு அதாவது மோட்சம். இவைகளைக் கொடுக்கும், மிகுந்த கீர்த்தியை உலகத்தில் அழியாமல் நிறுத்தும், துன்பம் வந்தாலும் உதவிசெய்யும், ஆகையால் மனிதர்களுக்கு கல்வியை விட சிறந்த பொருளில்லை. கற்பது நல்லது, கற்பது நல்லது, பிச்சை யெடுத்தாலும் கற்பது நல்லது. கற்கக் கற்கக் கசடறும். (கசடு = குற்றம்). ஓதுவதொழியேல். கைப்பொரு ளழிந்துபோகும், கல்விப் பொருள் அழியாது. கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி, கல்வியே கருந்தனம். கல்விப்பொருளுக்கும் செல்வப்பொருளுக்கும் நெடுவாசியுண்டு. எங்ஙனேஎனில், செல்வம் அள்ளக்குறைவுறும்; கல்வி அதனைச் சொல்லச் சொல்ல நிறைவுறும். செல்வம் கள்வரால் அபகரிக்கப்படும்;

கல்வி அவ்வாறுகாது கற்றோரால் உபசரிக்கப்படும். செல்வம் துன்பத்துள் மடுக்கும்; கல்வி அத்துன்பத்தைத் தடுக்கும்; இன்பத்தைக் கொடுக்கும். செல்வம் தீயில் வெந்துபோம்; கல்வி தீ முதலியவற்றால் அழிவுறாது. செல்வம் வெள்ளத்தில் அடிபடும்; கல்விகற்றோர்தம் உள்ளத்தில் குடிபடும் செல்வம் பகையினை ஆக்கும்; கல்வி அப்பகையினைப் போக்கும். செல்வம் நிலத்தில் புதைக்கப்படும்; கல்வி நிலத்தில் துதிக்கப்படும், மனத்தில் பதிக்கப்படும். செல்வம் நாணாளும் உருமாயும்; கல்வி நாணாளும் உருவேயும். செல்வம் தாயாதிகளால் பாகித்துக்கொள்ளப்படும். கல்வி அங்ஙனம் கொள்ளப்படாது. செல்வம் இவ்வுலகத்தே அழிவுறும்; கல்வி அவ்வாறு அழியாமல் தன்னை யுடையவர்க்கு எல்லாநலனும் அளித்துச் செல்லும்; பரலோகத்தும் உடன்சென்று அவரை நற்கதியிலுய்க்கும். பலவாறுரைத்தலேன்! கல்வி அன்னைபோல் இரட்சிக்கும்; தந்தைபோல் சிட்சிக்கும்; மனைவிபோல் இன்பம் செய்யும்; மைந்தன்போல் பணிசெய்யும்".

நண்பர்களே! நமது பெரியோர்கள் இன்னும் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்குக் கஷ்டமாயிருக்குமோ என்று பயந்து கொஞ்சம் சொன்னேன். நல்லபிள்ளைகளுக்கு இதுவேபோதும். மற்றவர்களுக்கு எவ்வளவு சொன்னால்தானென்ன? சரி இதை இவ்வளவோடு விட்டு தாய்ப்பாஷையைப் பற்றி அடுத்தமுறை பேசுகிறேன். வந்தனம். சொன்னவைகளை மறவாதேயுங்கள். வந்தனம். போய் வருகிறேன்.

ஓர்நண்பன்.

---

## கூட்டுறவினால் ஏற்படும் நன்மைகள்.

(24-ம் பக்கத்தொடர்ச்சி).

### கூட்டுறவு இயக்கம் ஏற்பட்டதெப்படி?

பொது நன்மைக்காக ஜனங்கள் ஒன்றுசேரும் வழக்கம் எல்லாத்தேசங்களிலு மிருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே அநேகதேசங்களில் நடைபெற்றுவந்த கிராம ஏற்பாடுகளில் முக்கியமானது கிராமத்திலிருக்கும் நிலங்களைப் பொதுவாகப்

பயிரிட்டு ஜனங்களின் சாப்பாடு முதலானவைகளையும் பொதுவாக நடத்திவந்தது தான். இந்த ஏற்பாட்டினால் தனவான் ஏழை என்னும் பேதமில்லாமல் கிராமஜனங்கள் யாவரும் ஜனசமுதாயத்திற்காக அவரவர்களுக்கேற்ற தொழில்களைச் செய்துவந்தார்கள். இவ்விதமாகச் சுமார் ஆயிரம் வருஷகாலம் நடந்து வந்ததாகத் தெரிகிறது. நாள் செல்லச்செல்ல இவ்வேற்பாடுகள் சிறிது சிறிதாகக் கெட்டு ஜனங்களுக்குள் அகங்காரமும், பணக்காரன், ஏழை, மிராசுதார், குடியானவன், எஜமானன், வேலைக்காரன் என்னும் பேதங்களும் தலைகாட்டத் தொடங்கின. ஆகவே, ஏழைகளும், குடியானவர்களும், வேலைக்காரர்களும் நாளுக்குநாள் அதிக கஷ்டமடைந்துகொண்டு வந்தார்கள். இவர்களின் கஷ்டத்தை நீங்கி முன்னேற்றமடையச் செய்வதற்கான ஏற்பாடுகளைப் பலபெரியோர் திரவிய சகாயத்தினாலும் அரசாங்க நிபந்தனைகளாலும் செய்து வந்தனர். ஆனால் அவைகள் தற்கால சாந்தியாயிருந்தனவே தவிர நீடித்த பலன் தரவில்லை. நீடித்தபலன் கிடைப்பதற்கு கூட்டுறவு தான் தங்க ஔஷதம் என்று கண்டுபிடித்தவர் இங்கிலாந்திலிருந்த "ராபர்ட் ஓவன்" (Robert Owen) என்பவர். இவர் இந்த இரகசியத்தைக் கண்டு பிடித்த காலத்தில் இங்கிலாந்தில் வேலைக்காரர்களுடைய நிலைமை எவ்வாறு இருந்ததென்பதைப் பற்றிச் சிறிது கவனிப்போம். சுமார் 150 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் நெசவு முதலான வேலைகளுக்கு யந்திரங்கள் ஏற்பட்டன. அதனால் அநேக வேலைக்காரர்களுக்கு வேலையில்லாமற் போய்விட்டது. தவிர, வேலை செய்பவர்களை அதிக கஷ்டப்படுத்தி சொந்தக்காரர்கள் அதிகலாப மடைந்து வந்தார்கள். தொழிற் சாலைகளில் பணம்போட்டு பங்காளிகளா யிருப்பவர்களின் பேராசை அதிகரித்துவந்தது. வேலைக்காரர்களுடைய கஷ்டமும் அதிகரித்து வந்தது. அவர்கள் கூலியோ வெகுகுறைவு; வேலைசெய்யும் நேரமோ அதிகம். ஆகையால் தொழிலாளர் தங்களுடைய அபிவிருத்தியின் பொருட்டு ஆங்காங்கு சங்கங்கள் ஏற்படுத்தினார்கள். அதனால் விசேஷபலன் கிடைக்கவில்லை.

இப்படியிருக்க, 'ராபர்ட் ஓவன்' தன்முயற்சியாலும், சூக்ஷ்மையினாலும், ஔதாரியத்தினாலும், நல்லொழுக்கத்தாலும் சொற்ப

சம்பளத்திலிருந்து ஒருபெரிய நூல் கம்பெனியின் மானேஜரானார். அதனால் வேலைக்காரர் படும் துன்பங்களை யறிந்துகொள்ள அவருக்கு அவகாசம் கிடைத்தது. ஆகையால் அவர் மிகவும் வருந்தி தொழிலாளரின் அபிவிருத்திக்கான மார்க்கமொன்றைக்கண்டு பிடித்து அவர்களின் கஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டுமென்று பலநாளளவும் ஆலோசித்து முடிவில் 'கல்வி' ஒன்றுதான் தகுந்த வழியென்று கண்டுபிடித்தார். சிறுவர்களுக்காக பாடசாலையொன்றை ஏற்படுத்தத் தொடங்கினார். ஆனால், அவர் வேலை பார்த்துவந்த கம்பெனியின் பங்குதார்கள் இந்தவிஷயத்திற்கு ஒத்து வராததினால் அவர் தனக்கு அனுகூலமான நண்பர்களைப் பங்குதார்களாகச் சேர்த்துக்கொண்டு அக்கம்பெனியை விலைக்கு வாங்கித் தன்மனோரதப்படி பாடசாலை ஸ்தாபித்தார். அதுவரை சிறுவர்க்குப் பாடசாலை யிருந்ததில்லை. இவர்தான் புதிதாக ஏற்படுத்தினார். அவ்வூரிலுள்ள சிறுவர்களை யெல்லாம் கல்விகற்க அனுப்பும்படி எல்லாஜனங்களையும் அவர் கேட்டுக்கொண்டார். இதற்காக ஏராளமான பணச்செலவும் செய்தார். கல்வி கற்றிருந்தால் தொழிலாளர் அதிக உதவியாயிருப்பார்களென்று அவர் திடமாய் நம்பினார். இதுவுமன்றி அவர் தம் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்கு லாபத்தில் விகிதம் (பங்கு) கொடுத்தார். வேலைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் முதலானவைகளை, கூட்டாகச்சேர்ந்து வாங்கினால் அனுகூல முண்டாகுமென்பதை யாவரும் அறியும்படி கூட்டுறவு பண்டசாலைகள் ஏற்படுத்தினார். ரொட்டி முதலியவற்றைக் கூட்டாகச் செய்யும்படியாயும் ஏற்பாடு செய்தார்.

'ராபர்ட் ஓவன்' தன் ஆட்களுக்குமாத்திரந்தான் இவ்வாறு உதவி செய்தாரென்பதில்லை. அவர் ஆங்காங்குபோய் பெரிய சபைகள் சேர்த்து பிரசங்கிக்கவும், பத்திரங்கள் ஏற்படுத்தவும், வியாசங்களும் புஸ்தகங்களுமெழுதி பிரசுரம் செய்யவும், பாடசாலைகள் அமைக்கவும், வேலையாட்களுக்கு லாபத்திலும் பங்கு கிடைக்கும்படியும் ஏற்பாடுகள் செய்தார். தன்சொந்தமாகிய இங்கிலாந்தில் மாத்திரமன்றி ஐரோப்பாவிலுள்ள இதரபாகங்களுக்கும் அமெரிக்காவிற்கும் சென்று தன் அபிப்பிராயங்களைப் பிரசங்க

மூலமாக யாவருக்கும் விளக்கி அவ்விடங்களிலும் இவ்விதமான சீர்திருத்தங்களை யுண்டாக்கினர். இதற்காகத்தன் சொத்து முழுவதையும் செலவழித்தார். ஏழை ஜனங்களின் கஷ்டத்தைக் கண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும இவ்வுத்தமருக்கு பொறாமை காரணமாக அநேக விரோதிகளும் முளைத்தார்கள். இவர் வேலைகளுக்குத் தடைசெய்வதே அவர்கள்வேலை. ராபர்ட் ஓவன் அவைகளையெல்லாம் தன்விடாமுயற்சியால் வென்றார். மேலும் அவர் ஆங்காங்குப் பள்ளிக்கூடங்களும் கூட்டுறவு பண்டசாலைகளும் ஏற்படுத்துவதோடு, அநேகஜனங்களை ஒன்றுகச் சேர்த்து 500 முதல் 1000 ஏகரா வரை நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து எல்லோரும் அவரவர்க்கேற்றபடி வேலைசெய்து கிடைக்கும் லாபத்தை அவர்களுக்குப் பங்கிட்டு அவர்களுடைய அபிவிருத்திக்காக வேண்டிய பாடசாலைகளை அதிகப்படுத்தினர்.

இவ்வாறு ஜனசமுதாயங்களும், பண்டசாலைகளும் தேசத்தில் பரவினபோதிலும் அவைகள் பலகாரணங்களால் விசேஷ அபிவிருத்தி யடையவில்லை. ஆயினும் அவைகளால் நேரிடக்கூடிய நன்மைகள் ஜனங்களுக்கு நன்கு விளங்கிற்று.

1844 ௵ டிசம்பர் ௴ 21 ௳ 'ராக்டேயில்' (Rochdale) என்னும் ஒரு சிறு பட்டணத்தில் இருபத்தெட்டு நெசவுக்காரர்கள் சேர்ந்து, இருபத்தெட்டு பவுன் மூலதனம் சேகரித்து ஒரு கூட்டுறவு பண்டசாலை (ஸ்டோர்) ஏற்படுத்தினர்கள். அவைகள் கண்டுபிடித்த முக்கியதத்துவங்கள் என்னவென்றால் (1) ரொக்கத்திற்குதான் விற்கவேண்டியது. (2) 'மார்க்கெட்' நிலவரப்படியுள்ள விலைக்கு விற்கவேண்டியது. (3) லாபத்தை மெம்பர்கள் சாமான்கள் வாங்கின அளவுக்குத்தக்கவாறு பங்கிடவேண்டியது. (4) லாபத்தில் ஒருபாகம் வித்தியாப்பியாசத்திற்காக உபயோகிக்கப்படவேண்டியது என்பவையே.

இக்கூட்டுறவு சங்கம் நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைந்தது. சிலவருஷங்களுக்குள் அநேக கிளைச்சங்கங்களும் ஏற்பட்டன. இவ்வாறு இவர் அடைந்த வெற்றியைப் பார்த்துப் பலவிடங்களி

லும் இவ்விதமான பண்டசாலைகள் வைக்கப்பட்டன. இப்போது இங்கிலாந்தில் ஒவ்வொரு பட்டணத்திலும் கூட்டுறவு பண்டசாலைகளிருக்கின்றன. அவ்விடத்து ஜனங்களில் மூன்றில் ஒருபாகம் இவ்வித பண்டசாலைகளில்தான் சாமான்களை வாங்குகின்றனர்.

(குறிப்பு :— அடுத்த சஞ்சிகையில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஆரம்பித்த விஷயத்தைப் பற்றி எழுதப்படும்).

(தொடரும்)

S. துரைசாமி ஐயர், பி. எ.,
ராணிப்பேட்டை.

---

## சந்தா நேயர்களுக்கோர் விண்ணப்பம்.

சந்தாநேயர்களிற் பலர் முதற்சஞ்சிகையில் விண்ணப்பித்துக் கொண்டபடி தங்கள் சந்தாத்தொகையை அனுப்பாமலிருக்கிறார்கள். அங்ஙனம் அனுப்பாதவர்களுக்கு இரண்டாவது சஞ்சிகை வி. பி. யில் அனுப்புவதாகத் தெரிவித்திருந்தும் அதிகச்செலவை யுத்தேசித்து அவ்வாறு அனுப்பவில்லை. ஆகையால் உடனே அனுப்பிவிடும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். தவிர, இவ்விரண்டாம் சஞ்சிகை வேறு அச்சியந்தரசாலையில் சுத்தமாகப் பதிப்பிக்க ஏற்பாடு செய்யவேண்டியிருந்தமையின் வெளிவரச் சிறிது காலதாமத மாயிற்று. இனி ஒவ்வொரு இங்கிலீஷ்மாத முதலிலேயே வெளியாகும். பௌர்ணமிதோறும் வெளிவரும் என்று முன் குறித்ததை சில அசௌகரியங்களை யுத்தேசித்து மாற்றிவிட நேர்ந்தது.

பத்திராதிபர்.

---

# CALENDAR.

| மார்ச். | | | | | | ஏப்ரல். | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 15 | 22 | 29 | ஞாயிறு. | ... | 5 | 12 | 19 | 26 |
| 2 | 9 | 16 | 23 | 30 | திங்கள். | ... | 6 | 13 | 20 | 27 |
| 3 | 10 | 17 | 24 | 31 | செவ்வா. | ... | 7 | 14 | 21 | 28 |
| 4 | 11 | 18 | 25 | ... | புதன். | 1 | 8 | 15 | 22 | 29 |
| 5 | 12 | 19 | 26 | ... | வியாழன். | 2 | 9 | 16 | 23 | 30 |
| 6 | 13 | 20 | 27 | ... | வெள்ளி. | 3 | 10 | 17 | 24 | ... |
| 7 | 14 | 21 | 28 | ... | சனி. | 4 | 11 | 18 | 25 | ... |

## முக்கிய ஹிந்து பண்டிகைகள்.

| | | |
|---|---|---|
| மார்ச் | 1, 28 | கிருத்திகை. |
| ,, | 10 | பௌர்ணமி, ஒலி பண்டிகை |
| ,, | 24 | அமாவாசை. |
| ,, | 26 | தெலுங்கு வருஷம். |
| ஏப்ரல் | 5, 19 | ஏகாதசி. |
| ,, | 8 | பௌர்ணமி. |
| ,, | 22 | அமாவாசை. |
| ,, | 24 | கிருத்திகை. |
| ,, | 28 | ஷஷ்டி. |

## இராகுகாலம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு—மாலை | 4-30 | மு | 6 | வரை |
| திங்கள்—காலை | 7-30 | ,, | 9 | ,, |
| செவ்—மாலை | 3 | ,, | 4-30 | ,, |
| புதன்—பகல் | 12 | ,, | 1-30 | ,, |
| வியா— ,, | 1-30 | ,, | 3 | ,, |
| வெள்—காலை | 10-30 | ,, | 12 | ,, |
| சனி— ,, | 9 | ,, | 10-30 | ,, |

* அடுத்த மாதமுதல் பஞ்சாங்கம் போடப்படும்.

Printed by M. Ramanujachariar, at the Victoria Jubilee Press, Chittoor,
and published at Ranipet by Pandit P. Srinivasulu Naidu, Editor.

## புத்தக விளம்பரம்.

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ் உரையுடன்,

(சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான் கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யம் ... ரூ. 8—0—0

கைவல்ய நவநீத வினாவிடை

(ஷையார் இயற்றியது) ... ... ரூ. 2—8—0

பகவத்கீதை வசன வினாவிடைஷை ஷை ரூ. 1-12—0

மெய்ஞ்ஞானபோதம் ஷையார் லோகோபகாரியில் எழுதியது ... ... ... ... ... ரூ. 0-12—0

விவேகாநந்தர் உபன்யாச ஞானத்திரட்டு ரூ. 1—0—0

வியாச தாத்பர்ய நிர்ணயம் ... ... ரூ. 0-12—0

சசிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன்கூடியது 0-12—0

விவேக சூடாமணி ... ... ... ரூ. 0-12—0

மநீஷாபஞ்சகம் ... ... ... ரூ. 0—5—0

மகாராஜா துறவு-வசனம் ... ... ரூ. 0—3—0

தேசிங்குராஜன் ... ... ... ரூ. 0—6—0

நாகாஜீவ வாதங்கட்டளை (தமிழ்) ... ரூ. 0—4—0

ஷை (தெலுங்கு) படத்துடன் கூடியது .. ரூ. 0—3—0

காரியசித்தியின் இரகசியம் ... ... ரூ. 0—5—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வ. ஆ.).

# The 'Sanmarga Bhanu'

The cheapest and High Class Tamil Monthly.

ஓர் உயர்ந்த மாதாந்தத்தமிழ்ச் சஞ்சிகை.

| | | |
|---|---|---|
| வருடசந்தா உள் நாட்டிற்கு | ரூ. | 1—0—0 |
| வெளிநாட்டிற்கு | ,, | 1—4—0 |
| தனிச்சஞ்சிகை | ,, | 0—2—0 |

'Sanmarga Bhanu' Office,
Ranipet, (N. A.)

Reg. No. M. 2026. சந்தா ஙெ.

To

M. R. Ry.